2015 செப்டம்பர் 21] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 22–9–2015, செவ்வாய்க்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. 2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 25–9–2013 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 25–9–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 170–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 53 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

94. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் (i) நிதிக் குழு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு, அதனுடைய செயல்பாடுகளை 7–11–2013 ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தத் தொடங்குகிற நாளாக நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 7–11–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 233; (ii) கல்விக் குழு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு, அதனுடைய செயல்பாடுகளை 7–11–2013 ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தத் தொடங்குகிற நாளாக நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 7–11–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 234; (iii) புலத்தலைவர்கள் அனைவரும் கல்விக் குழுவின் அலுவல் வழி உறுப்பினர்களாக இருப்பர் என்பதால் அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 22(1)–ல் 'வகை II–ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பு இனம் 'b'–ன்கீழ், அப்புலத்தலைவர்களிலிருந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவுக்கு நியமனம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று வழிவகை செய்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 7–11–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 235 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 53 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

95. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு, அதன் செயல்பாடுகளை 16—12—2013 ஆம் நாள் முதல் செயல்படுத்தத் தொடங்குகிற நாளாக நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 16—12—2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 252—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 53 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. (i) அண்ணாமலை பல்கலைக்கழக துறைகளின் செயல்பாடுகள் 24—1—2014 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 24—1—2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 15; (ii) அண்ணாமலை பல்கலைக்கழக பாடத்திட்ட குழுக்களின் செயல்பாடுகள் 24—1—2014 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 24—1—2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 16 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 53 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

97. அண்ணாமலை பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்திற்காக, பல்கலைக்கழக வேந்தருக்கு மூன்று பெயர்களடங்கிய பெயர் பட்டியலை பரிந்துரை செய்வதற்கான தேடுதல் குழுவை அமைத்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 20—2—2014 ஆம் நாளிட்ட அரசாணை (1டி) எண் 29—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 53 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்கல்வி படிப்புகளின் சேர்க்கைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், ஒதுக்கீடு செய்வதற்கும் அப்பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் அளித்தது குறித்து உயர் கல்வி (எச்1) துறையின் 28—2—2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 39—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/2007) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2015 செப்டம்பர் 21]

99. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டமைப்பு இணைப்பு மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து 13–3–2014 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/மி.க.(இ)(ம) மா.திநு/11/2–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

100. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

353. 2012–2013 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

354. மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

355. மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

356. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

357. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2015. (தமிழ், ஆங்கிலம்)

358. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் "தாய் திட்டம்" (தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்) பற்றிய சிறுநூல். (தமிழ்)